TAMIL NADU LEGISLATURE
21 JUL 1973
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, குறுகிய கால வினா எண் 4 ஒத்திவைக்கப்படுகிறது. 488, 489, 490 ஆகிய மூன்று வெள்ளிக்குறியிட்ட கேள்விகளும் ஒத்திவைக்கப்படுகின்றன.

Applied Nutrition Programme

***476 *Q*.—Thiru N. DENNIS**: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the applied Nutrition Programme is to be introduced in Killiyoor Panchayat Union ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி பிற்பட்ட பகுதியாக இருப்பதால் அங்கு இந்தச் சத்து உணவுத் திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டது. 1973–74-ம் ஆண்டுக்கு மத்திய சர்க்காரால் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்ட மூன்று இடங்களில் ஒன்றாகக் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி உட்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு மூன்று ஒன்றியங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபார்சு செய்கிறார்கள். இப்பொழுது 22 வட்டாரங்களில் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எடுக்கப்படுகிற மூன்று வட்டாரங்களில் எந்த மாவட்டங்களில் குறைவான அளவுக்கு இருக்கிறதோ அந்த மாவட்டங்களில் சில ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மற்ற இடங்களைப் பொறுத்து அடுத்த ஆண்டுதான் கவனிக்க வேண்டிவரும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த அப்ளைடு நூட்ரிஷன் ப்ரொக்ராம் என்ன கருத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகிறது ? இதை விஸ்தரிப்பதற்கு என்ன கஷ்டங்கள் இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் கருத்திற் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபார்சு செய்கிறார்கள். அது குறித்து ஊராட்சி இயக்குநர் அவர்கள் பரிசீலனை செய்கிறார். அப்படி 22 வட்டாரங்கள் இதுவரையில் தெரிந்தெடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு மூன்று வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. நாம் ஆறு வட்டாரங்கள் கேட்டோம். மத்திய சர்க்கார் மூன்றுதான் கொடுத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ அதைப் பொறுத்துத் தான் வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கும் குடிசைப் பகுதிகளில் வாழும் குழந்தைகள் இதனால் பயன் பெறுகின்றனர். கிராமப் பகுதிகளில் அரிசனக் காலனிகளில் இருக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இந்தச் சத்துணவுத் திட்டம் விஸ்தரிக்கப்படத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய பிற்பட்ட நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்கு இத் திட்டத்தைப் பரவலாக்க ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி வசதியைப் பொறுத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிறது. நிதி வசதி பெருகினால்தான் அந்த அளவு செய்ய முடியும். எந்த அளவுக்கு அவர்கள் ஒதுக்கித் தருகிறார்களோ அந்த அளவுக்குத் தான் அதைச் செய்ய முடியும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether the scheme has been implemented in Dharmapuri district or going to be introduced there ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஹரூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் கிடைக்கத்தக்கதாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒன்றியம் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த வகையில் சென்ற ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை ஊராட்சி ஒன்றியம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு சில மாவட்டங்களில் இரண்டு மூன்று ஒன்றியங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, ஒன்றுமே இல்லாத நீலகிரி மாவட்டம் இந்த ஆண்டு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாக இருப்பதை மூன்றாக்க முயற்சிக்கிறோம்.

1973 மார்ச் 23]

திரு. நா. வீராசாமி : அப்ளீடு நூட்ரிஷன் ப்ரொக்ராமை இம்ப்ளி மெண்ட் செய்ய ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவாகிறது? ஒவ் வொரு ஆண்டுக்கும் ஒரு சில ஒன்றியங்கள் என்று வைத்தால், சத்துள்ள உணவை மூன்று அல்லது ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் அந்தப் பகுதி யில் கொடுத்தால் குழந்தைகள் உண்மையிலேயே உடல் வலிவு பெறும் என்று சொல்கிறார்கள். அப்படி மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் சத்துள்ள உணவு கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 18 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆகவே, மத்திய சர்க்கார் கொடுக்கும் நிதியின் அடிப்படையில்தான் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரியில் மருந்துச் செலவுக்காக ஐயாயிரம் ரூபாய்தான் யூனியன் செலவிடலாம் என்று இருப்பதைச் சற்று அதிகப்படுத்த சர்க்கார் உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மருந்து பற்றிய கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழுவதல்ல. சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவைகளில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு கே. டி. கே. தங்கமணி : இந்த அப்ளீடு நூட்ரிஷன் ப்ரொக்ராம் மொத்தம் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் இப்பொழுது அமுலாகி யிருக்கிறது? இன்னும் அமுலாகாமல் இருக்கும் பஞ்சாயத்து யூனியன் கள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் 22 ஊராட்சி ஒன்றியங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் அமுல்படுத்தப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து இந்தச் சத்துணவு திட்டத்திற்கு எவ்வளவு உதவி வரு கிறது? மேலும் எவ்வளவு வேண்டும் என்று கேட்கப்படுகிறது? ஆறு இடங்கள் கேட்டதில் மூன்று கிடைத்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நாம் கேட்ட ஆறு இடங்களையாவது தரு வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய சர்க்காரிட மிருந்து வருகிற உதவித் தொகை விவரம் இப்பொழுது இல்லை. ஆனால், ஆறு நாம் கேட்டோம். மூன்று தந்திருக்கிறார்கள். மறுபடியும் வற்புறுத்தி வருகிறோம். ஆறு இடங்களுக்கும் அனுமதி வந்தால் அதைச் சிறப்பாக நிறைவேற்ற முடியும். அதற்கான அனுமதியை எதிர்பார்க்கிறோம்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : சத்துணவுத் திட்டத்தின் மூலம் என்ன என்ன சத்து உணவுகள் வழங்கப்படுகின்றன? எந்த முறையில் வழங்கப் படுகின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊட்டச் சத்தும் விடமினும் கலந்துள்ள ரொட்டி முதலியவை குழந்தைகளுக்குத் தரும் முறையில் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. "கேர்" நிறுவனத்தின் ஆதர வோடும் மற்றவற்றின் ஆதரவோடும் இது நடைபெறுகிறது.

திரு ஜே. ஜேம்ஸ் : கன்யாகுமரி மாவட்டத்தில் மிகவும் பிற்போக்கான மேல்புறம், திருவட்டாறு ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன்களையும் இத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் எந்த எந்தப் பகுதி பிற்பட்டது என்று கணக்கெடுத்து அறி விக்கின்றாரோ அந்த அடிப்படையில் சேர்க்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்காக மாநில சர்க்கார் ஏதாவது செலவிடுகிறதா ? பஞ்சாயத்து யூனியன்களும் இது சம்பந்தமாக ஏதாவது செலவழிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா?

கிராமத்தில் அரிசனக் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் மூல மாகத்தான் பள்ளிகளுக்கு வர வாய்ப்பு அதிகமாக இருக்கிற காரணத் தால் அரிசனப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் இதற்காகச் செலவு செய்கிற நிலையில் இல்லை. மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் செலவு செய்கிறது. மொத்தத்தில் 12 இலட்ச ரூபாய் என்று குறிப்பிட்டேன். எந்த எந்த அளவுக்கு என்ற விவரத்திற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம். ஆனால், ஓரளவுக்கு மிகப் பிற்பட்ட பகுதிக்கு வசதி அளிக்க வேண்டும் என்ற முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிதிவசதி அதிகப் படுத்தப்பட்டால் அதை விரிவுபடுத்தலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : சத்துணவுத் திட்டத்திற்கு கேர் நிறுவனம் தவிர வேறு எந்த எந்த நிறுவனங்கள் உதவி புரிகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேர் நிறுவனம்தான் உதவி புரிந்து வருகிறது.

Thiru B. Venkataswamy : Sir, the scheme was said to have been extended to Harur in Dharmapuri district. May I know from the Hon. Minister whether any other block will come under this programme in Dharmapuri District.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியமும், ஹரூர் ஊராட்சி ஒன்றியமும் சத்து ணவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.